# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
## S.C. 193/2023
## Prosecution Witness : 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | திரு. விஜய் | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | திரு. செல்வராஜ் | **Calling** | **:** | சார்பு ஆய்வாளர், பழனி நகர் காவல் நிலையம் |
| **Village** | **:** | | **Religion** | **:** | இந்து |
| **Taluk** | **:** | திண்டுக்கல் | **Age** | **:** | **41** |
| | | | **Dated** | **:** | **10.09.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 11 (பட்டியல் சாட்சி 12), **திரு. விஜய்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 04.12.2021ம் தேதி 22.30 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மதுரை மாவட்டம், அப்பலோ மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று பார்த்தபோது, உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மனோஜ் பட்டேல் மயக்க நிலையில் இருந்ததால், அவரது அண்ணன் சென்னமநாயக்கன்பட்டி, இந்திரா நகர், திருப்பதி பாலாஜி நகரைச் சேர்ந்த ராம்ஜி படேல் மகன் சதீஸ்படேல், வயது 40 என்பவர் அவருக்கு தமிழ் பேசத் தெரியும், எழுத தெரியாது என்பதால், அவருடன் இருந்த பெரியசாமி என்பவரிடம் சதீஸ்படேல் தமிழில் சொல்ல சொல்ல அதை பெரியசாமி எழுதி சதீஸ்படேலிடம் கொடுத்து

கையொப்பம் பெற்றுக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட நான் 05.12.2021ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல்நிலையம் வந்து, திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய குற்ற எண். 1245/2021, இ.த.ச. 294(b), 307 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையையும், வாதியின் புகாரையும் கனம் நீதித்துறை நடுவர் எண். 1அவர்களுக்கும், மற்ற உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். மேல் விசாரணைக்காக அதை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

அப்பலோ மருத்துவமனையில் வைத்து சதீஸ் படேல் சொல்ல சொல்ல புகாரை பெரியசாமி எழுதினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் வைத்து தான் போலீசார் சொல்ல சொல்ல பெரியசாமி மேற்படி புகார் மனுவை எழுதினார் என்றால் சரியல்ல. திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் இருந்து நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்திற்கு ½ மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். ஆனால் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை 05.12.2021ம் தேதி இரவு 08.00 மணிக்குத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது என்றால் சரிதான். புகார் மனு வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும், பொய்யான தகவலின் அடிப்படையில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 10.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..)Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.